முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 185/2019

வாதி தரப்பு சாட்சி-1 அந்தோனி பீட்டர் **திருமதி.ஏ.பிரேமா** பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 16.11.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. அசல் செட்டில்மெண்ட் ஆவணங்கள் யாரிடம் உள்ளது என்றால் சைமனிடம் உள்ளது. சைமனுக்கு அவரது தாயார் எழுதிகொடுத்த செட்டில்மெண்ட் அடிப்படையில் தான் அவரது மனைவிக்கு இரண்டு செட்டில்மெண்ட் ஆவணங்கள் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்து செட்டில்மெண்ட் அடிப்படையில் அந்த சொத்துக்கள் 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களின் அடிப்படையில் 3ம் பிரதிவாதி ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தில் கடன் பெற உரிமை உண்டு என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி அந்தோணி உடையார் ஆரம்ப தொடக்க பள்ளி தலைமை ஆசிரியராக உள்ளர்.

2. வழக்கில் என்ன பரிகாரம் கோரியுள்ளோம் என்றால் அமலி 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தையும், 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த செட்டில்மெண்ட் பத்திரங்களையும் இரத்து செய்ய வேண்டும் என கேட்டுள்ளோம். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணங்களில் உள்ள சொத்துக்களுக்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணங்களில் உள்ள சொத்துக்களுக்கும் எனக்கும் சம்மந்தம் உள்ளது என காட்ட ஏதேனும் ஆவணங்கள் தாக்ல செய்துள்ளேனா என்றால் இல்லை. செட்டில்மெண்ட ஆவணத்தில் உள்ள சொத்துக்கள் 1,2 பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். அமலி 1ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்து சமயத்தில் அவர் சுயநினைவுடன் தான் இருந்தார் என்றும், நான் பொய்யாக அவர் சுயநினைவுடன் இல்லை என கூறுகிறேன் என்றால் சரியல்ல. அவருக்கு சுயநினைவு இல்லாமல் தான் இருநதார். அமலி எந்த வருடம் இறந்தார் என்றால் 2009 ல் இறந்தார். அமலி 1ம் பிரதிவாதிக்கு 08.09.2005 ல் செட்டில்மண்ட் எழுதி கொடுத்துள்ளார்எ ன்றால் சரிதான்.

3. அமலி சுயநினைவுடன் இல்லை என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் சுயநினைவுடன் இருந்த அமலியை சுயநினைவு இல்லாமல் இருந்தார் என பொய்யாக கூறுகினேன் என்றால் சரியல்ல. தானசெட்டில்மெண்ட் அடிப்படையில் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் பட்டா மாற்றப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அமலிக்கு இறக்கும் வரை அவரை 1ம் பிரதிவாதி தான் பராமரித்தார் என்றால் சரியல்ல. அமலி அவரது மகள் லீமா வீட்டில் இருந்தார். மேற்படி விவரத்தை எனது வழக்குரை மற்றும் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

4. அமலி இறக்கும் வரை நல்ல உடல்நிலையில் தான் இருந்தார் என்றும், வயோதிகம் காரணமாக தான் அவர் இறந்தார் என்றால் சரியல்ல. குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.79/2018 வழக்கை பாக பிரிவினை கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளது. திருச்சி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.1057/2012 வழக்கு யார் தாக்கல் செய்தது என்றால் லீமா தாக்கல் செய்துள்ளார். அதில் நான் தரப்பினரா என்றால் ஆமாம். மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் முடிந்துவிட்டது. மேற்படி இரண்டு வழக்குகள் பற்றி இந்த வழக்கின் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரங்களை பெற எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு காலவரையறை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**
**Kulithalai.**